New
Science Academy
B.M.C. முன்பாக,
JAFFNA.
Special English
Course
விசேட ஆங்கில மொழிப்
போதனை
ஆசிரியர்
த. ந. பஞ்சாட்சரம்
Mon & Thu
3.00 - 5.00 P.M

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
B.M.C. முன்பாக,
JAFFNA.
91 A/L Weekend class
7.30 - CHE - சண்
8.30 - ZOO - தங்கராஜா
9.30 - PHY - மணியம்
9.30 - CHE-செல்வரஞ்சன்
10.30 } 12.30 } BOT - குணசீலன்
10.30 } 12 30 } MATHS - வெக்டர்
12 30 - PHY
- சோதிலிங்கம்
1.30 - ZOO - தம்பிராஜா

சுடர் 5: பிரமோதூத ஆனி 26 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்ஜா பிறை 16 (10 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 137

# கிழக்கு தமிழரை அழிக்க ஆயுதக் குழுக்கள்!

## நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை!!

கொழும்பு, ஜூலை 10

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப் படைகளைச் சேராத பலர் குழுக்களாகச் சேர்ந்து கத்தி, பொல்லுகளுடன் திரிவதாக அறியவருகிறது.

கிழக்குத் தமிழரைப் படுகொலை செய்து அவர்களை டயர் போட்டு எரிக்கும் செயல்களில் இக்குழுக்கள் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இக்குழுக்களின் கைகளில் சிக்கிய நூற்றுக்கணக்கான தமிழர்கள் பற்றி தகவல் ஏதும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

அரசபடைகளின் ஆதரவோடு இயங்கும் இந்தக்குழுக்கள், நியாயம் வழங்கும் உரிமையைத் தம்கைகளில் எடுத்திருக்கின்றன என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

படையினர் தாக்குதலுக்கு இலக்காகும் பகுதிகளுக்கு இக்குழுவினர் விரைந்து வருவதாகவும்–

பின்னர் அப்பகுதியில் காணப்படும் அப்பாவித் தமிழ் மக்களை அவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை வீரநகரில் 35 தமிழர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 10

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வீரநகரில் ஊர்காவல் படையினர் 35 தமிழர்களை வெட்டிக்கொன்றுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் நால்வர் 5 வயதுச் சிறுவர்கள் ஆவர்.

விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ-9)

## யாழ். செயலகத்துக்கு 75வீதமான ஊழியர் வரவு

கடந்த ஒரு மாதத்துக்குப் பின் நேற்று யாழ் செயலகத்துக்கு 75 வீதமான ஊழியர்கள் வேலைக்கு வந்திருந்தனர்.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சகல ஊழியர்களுக்கும் அறிவுறுத்தல் கூட்டம் ஒன்றை நடாத்தினார்.

தற்காலிகமாக உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்குச் சென்று கடமையாற்றும் யாழ் செயலக ஊழியர்களை இன்றும் செயலகத்துக்கு வருமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-3-9-10)

## மூதூரில் 40 ஆயிரம் பேர் 4 நாட்களில் அகதிகளாகினர்

கடந்த நான்கு நாட்களில் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக வெளியேறி உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை– நேற்று இந்த பகுதிகளுக்குச் சென்ற இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் வெளியேறியோருடைய வீடுகளை உடைத்து அங்கிருந்த பொருள்களை சூறையாடியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-9]

## பல்கலைக்கழக கூட்டத்தில் மாத்தயா

யாழ்ப்பாணம், ஜூலை 10

இன்று காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் மாணவர்களின் பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) கலந்து கொள்வார். (உ-9)

## யாழ்ப்பாணத்தில் உணவுக்கு பற்றாக்குறை இல்லையாம்

### மீண்டும் அடித்துச் சொல்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவுப் பற்றாக்குறை இல்லை, ஒரு மாதத்துக்குத் தேவையான உணவுப்பொருள்கள் இருக்கின்றன– என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன்விஜேரத்தினா மீண்டும் அடித்துச் சொல்லியிருக்கிறார்.

சென்ற தடவை செய்தியாளர் மாநாட்டில் இதே தொனியில் தகவல் வெளியிட்ட அவர் நேற்று கொழும்பில் உள்ள வெளிநாட்டுராஜதந்திரிகளிடம் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

வடக்கு– கிழக்கு நிலைமையை விளக்குவதற்காக அவர் ராஜதந்திரிகளை மாநாட்டுக்கு அழைத்திருந்தார்.

அங்கு அவர் மேலும்சொன்னதாவது:–

கடந்த ஜூன் 11 ஆம் திகதி யுத்தம் ஆரம்பித்தபோது யாழ்ப்பாணத்தில் இரண்டு மாதங்களுக்கான உணவு விநியோகம் கிடைத்தது. தற்சமயம் ஒரு மாதத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பறையனாலங்குளத்தில் கண்ணிவெடி! 10 படையினர் பலி!!

### 22 பேர் படுகாயம் என இராணுவ வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூலை 10

வவுனியா, பறையனாலங்குளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெரும் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர். 22 படையினர் படுகாயமடைந்தனர்.

படையினர் சென்ற வாகனம் கண்ணிவெடியில் சிக்கி சுக்குநூறாகியது.

இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ-எ)

## முச்சந்தி முரளி



தமிழ்ப் பகுதியிலை போதியளவு உணவு இருப்பதாக 'ஜோக்' அடிக்கிறார், பாக்கயில்லையே......!

## நேற்று மட்டும் 3,600 பேர்

## பத்து நாட்கள் பசி கிடந்த பின்னர் மன்னாரிலிருந்து தமிழகம் சென்றனர்

சென்னை, ஜூலை 10

நேற்று மட்டும் சுமார் 3,600 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

இவர்கள் அனைவரும் தலைமன்னார், பேசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

கடந்த பத்து நாட்களாகத் தாம் உணவு எதுவுமின்றிப் பட்டினி கிடந்ததாக இவர்கள் தெரிவித்தனர்.

தாம் கடல் மார்க்கமாக வரும்போது கடற்படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை பிள்ளையார் ஆலயம் காடையர்களால் எரிப்பு

### சிலையை குளத்தில் போட்டனராம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பழமை மிகு அம்பாறைப் பிள்ளையார் ஆலயத்தை தீயிட்டுக் கொழுத்திய சிங்களக் காடையர்கள் கோயிலிலிருந்த பஞ்சமுகப் பிள்ளையார் சிலையை குளத்தில் போட்டனர். தங்கத் தகடுகளையும் கொள்ளையிட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் 13 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

அம்பாறையிலிருந்து ஒரு மாதகால கஷ்டத்தின் பின்னர் ஒருவாறு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அரச ஊழியர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி இரவு

[3ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசா கூறுவது போல

# ஈழ விடயத்தில் 3ஆம் நாடு தலையிட இந்தியா அனுமதிக்கக் கூடாது

### வாழப்பாடி சொல்கிறார்

சென்னை, ஜூலை 10

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், அந்நாட்டு ஜனாதிபதி பிரேமதாசா கூறுவது போல மூன்றாவது நாடு எதுவும் தலையிடுவதை இந்தியா அனுமதிக்கக்கூடாது.

இப்பிரச்சினையை இலங்கையும் இந்தியாவும் சேர்ந்து பேசித் தீர்க்கவேண்டும்.

இவ்வாறு சொன்னார் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி.

திரு. இராமமூர்த்தி நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

அவர் சொன்னார்:–

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுக்க இந்திய மத்திய அரசு ராஜீய துறை நிர்பந்தங்களை இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் மீது முப்படைகளும் தாக்குதல் நடத்திவருவதை கண்டு இந்திய அரசு வாளாவிருக்கக்கூடாது.

இலங்கை அதிபர் பிரேமதாஸா கூறுவதுபோல் மூன்றாவது நாடு எதுவும் இதில் தலையிட முடியாது இலங்கையும், இந்தியாவும் பேச்சு நடத்திதான் இந்த பிரச்சினையை தீர்த்துக்கொள்ள

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சுப நேரம்

10-7-90

செவ்வாய்க்கிழமை ஆனி 26

சுபநேரம்!

10-28— 11-58

இராகுகாலம்

02-58—04-28

## சர்வதேச சமூகத்துக்கு ரஞ்சன் தரும் அர்த்தம்

கொழும்பு, ஜூலை 10

விடுதலைப் புலிகளுடன் இனிமேல் பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே பேசமுடியும் என்று ஜனாதிபதி திரு. பிரேமதாச கூறியிருந்தார் அல்லவா?

அதற்குப் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று அர்த்தமும் விளக்கமும் தெரிவித்தார்.

ராஜதந்திரிகளிடம் இது பற்றி அவர் கூறியதாவது:–

விடுதலைப் புலிகளோடு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், அரசாங்கத்திற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் சர்வதேச சமூ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் இதுவரை 300 பேர் பலி!

### தமிழ் எம்.பி ரஞ்சனிடம் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை முன்னூறுக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகி உள்ளனர்.

இப்படி திருமலைப் பகுதி மக்கள் தங்களுக்குக் கூறியதாக ரெலோ பிரமுகர் திரு. கே. வி. இராஜலிங்கம் திரு. திவ்யநாதன் எம். பி ஆகியோர் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவிடம் தெரிவித்திருக்கிறனர்.

திரு. இராஜலிங்கமும் திரு. திவ்யநாதனும் திருகோணமலைக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்பு திரும்பிய பின்னர் இதனைத் தெரிவித்தனர்.

தம்பலகமம், திரியாய், ஆகிய பகுதிக் காடுகளில் பீதி காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருக்கின்றனர் என்றும் இவர்கள் தெரிவித்தனர். (உ-எ]

## கோட்டை பகுதியில் நேற்று பொதி போட்ட விமானங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நேற்று மாலை 5 மணியளவில் இரு ''அவ்ரோ'' விமானங்கள் கோட்டைப்பகுதிக்கு மேலாகப் பறந்து பொதிகளைப் போட்டன.

இரு விமானங்களும் அடுத்தடுத்து – ஒனறன்பின் ஒன்றாக பொதிகளைப் போடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தன. வழமைபோல் அவை நேற்றுக் குண்டு வீச்சு நடத்தவில்லை.

எனினும் வீதிகளில் சென்ற மக்கள் பீதியடைந்து பாதுகாப்பானஇடங்களை நோக்கி ஓடினர்.

விமானங்களில் இருந்து போடப்பட்ட பொதிகள் கோட்டைக்குள் வீழ்ந்தனவா வெளிப்புறங்களில் வீழ்ந்தனவா என்பது ஊர்ஜிதமாகத் தெரியவரவில்லை.

அவ்ரோ விமானங்கள் பொதிகளைப் போடுவதற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கிக் குண்டு தாக்கி வல்வை தேவாலயம் சேதம்

வல்வெட்டித்துறை, –ஜூலை 10

வல்வெட்டித்துறை நகரை நோக்கி கடந்த சனிக்கிழமை நண்பகலும் கடற்பகுதியில் இருந்து பீரங்கிக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நகரின் சந்தைப் பகுதியை நோக்கியே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. தாக்குதலின் போது சந்தைக்குச்சமீபமாகவுள்ள றோமன் கத்தோலிக்க தேவாலயமும் சேதமுற்றது.

சமரபாகு, இலக்கணாவத்தை, இலந்தைக்காடு போன்ற பகுதிகளும் பாதிக்கப்பட்டன. இலந்தைக்காட்டில் ஒரு பெண்மணி உட்பட பல பொதுமக்கள் காயமடைந்தனர்.

கடந்த திங்கள்,செவ்வாய், புதன் கிழமைகளிலும் வல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள் கொண்டுவர நாளை பரீட்சார்த்த முயற்சி

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களைக் கொண்டுவருவதற்கானமுயற்சிகளை நாளை புதன்கிழமை பரீட்சார்த்தமாக மேற்கொள்ள ஏற்பாடாகி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பத்து லொறிகள் வவுனியாவுக்குத்[தேவை ஏற்படும்பட்சத்தில் மதவாச்சிக்குச்]செல்வது–

கொழும்பிலிருந்து பத்து லொறிகளில் அத்தியாவசிய உணவுப்பொருள்களை ஏற்றிக் கொண்டு வவுனியா[அல்லது மதவாச்சி]வரை வருவது–

அங்கு வைத்துப் பொருள்களை இங்கிருந்து செல்லும் லொறிகளில் மாற்றி ஏற்றிக் கொண்டு வருவது.

இதுவே நாளை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட இருக்கும் முயற்சியாகும்.

கொழும்பில் உள்ள வடபகுதிக்கான அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்றுத் தொடர்பு கொண்ட போது இந்த முயற்சியை மேற்கொள்ள முடிவாகியது. [அ-3]

## கோட்டை சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 10

நேற்று கோட்டை இராணுவ முகாமிற்கு விமானங்களிலிருந்துபோடப்பட்ட உணவுப் பொதிகள் சில கோட்டையின் மேல் தளத்தில் விழுந்ததாகவும் –

அவற்றை எடுக்க கோட்டை கொத்தளப் பகுதிக்கு வர முற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

இதேவேளை நேற்று நண்பகலில் கோட்டை முகாமின் இராணுவ பாதுகாப்பு அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல் மேற்கொண்டதில் அந்த அரண் முற்றாக சேதமடைந்ததாகவும் சொல்லப்பட்டது. (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் தொடும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**இறைச்சிக் கோழி**

இறைச்சிக்கு உகந்த சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா & 'பிரதர்ஸ்' பிரம்படி லேன், கொக்குவில். (13596)

**தவறிவிட்டது**

முத்திரைச் சந்தைக்கும், நாயன்மார்கட்டு அம்பாள் வீதிக்கும் இடையில் இரண்டு வீட்டு திறப்புக்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அம்பாள் வீதி, நாயன்மார்கட்டில் உள்ள புவிதா ஐஸ்கிறீம் கொம்பனியில் ஒப்படைக்கவும். (13652)


## பயிலுநர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

இடம் பெயர்ந்து வரும் அகதிகளுக்கு பயிலுநர் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உடைகள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை சேகரித்து வழங்க வேண்டும் என்று யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள பயிலுநர் ஆசிரியர் சங்கக் கிளைகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் சங்கத்தின் சார்பால் உப-செயலாளர் திரு ம. ஞானசம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ 10)

### ஹெலி திடீரெனத் தாக்கிய போது

# சங்குப்பிட்டி - கேரதீவு கடலில் குழந்தையை பலி கொடுத்த தாய்!

## வவுனியாவிலிருந்து அகதியாக வந்தவர் தகவல்

பருத்தித்துறை, ஜூலை 10

சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவு வருவதற்காக நாம் பாதையில் ஏறிய போது ஹெலிக்கொப்டர் ஒன்று திடீர் என்று வந்து வேட்டுக்களைத் தீர்த்தது. இந்த களேபரத்தில் பாதையில்இருந்த இளம்தாய் ஒருவர், தனது இரண்டு வயதுக்குழந்தையை கடலுக்குள் தவறவிட்டார். எம் கண் முன்னாலேயே அக்குழந்தை மரணமானது.

வவுனியா பொனேக்ஸ் எலக்ரோனிக் கடையில் வேலை பார்த்து வந்த வைத்திலிங்கம் சோமசுந்தரம் (வயது 21) மேற்கண்டவாறு உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வவுனியாவிலேயே பிறந்து வளர்ந்து ஆரம்பக்கல்வி முதல் ஜீ சி ஈ சாதாரண தரம் வரை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் சிங்களமொழிமூலம்கல்வி பயின்ற சோமசுந்தரம் தமது அனுபவம் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

நானும் எனது வயோதிபத் தாயாரும் மன்னார் வீதியிலுள்ள நகரசபை இல்லத்தில வசித்து வந்தோம்.

சென்ற மாதம் 15ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் காமினி மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எமது நகரசபை இல்ல விடுதிகளை நோக்கி ஷெல் குண்டுகளை ஏவினார்கள்.

நாம் பயத்தினால் வேப்பங்குளம் சென்றோம். அங்கு நின்றபோது அனுராதபுரம் யோசெப் முகாமிலிருந்து நூற்றுக்கணக்கான பஸ்களில் இராணுவத்தினர் ஈரப்பெரிய குளத்துக்கு வருவதை அறிந்தோம் இருப்பினும் நான்கு ஐந்து தினங்கள் வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் தங்கினோம்.

**நண்பர் மரணம்**

20 ஆம் திகதி எனது நண்பரான டேவிட் ஹென்றி (வயது 22) என்பவர் குளித்துக்கொண்டிருந்த போது ஷெல்லினால் படுகாயமுற்றார். அவரை நானும் நண்பர்களுமாக பூவரசங்குளம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம் அது வசதிகள் குறைந்த கிராமிய ஆஸ்பத்திரி அங்கு அவரைக் காப்பாற்ற முடியவில்லை, அதிக இரத்தப்போக்கால் அவர் இறந்துபோனார்

**பீப்பாய் குண்டால் காடு எரிந்தது.**

பூவரசங்குளம் பகுதியில் வவுனியா அகதிகள் [illegible] அளவில் தங்கி இருந்தபோது அவ்ரோ விமானங்கள் பீப்பாய் குண்டுகளை அப்பகுதியில் வீசின தெய்வ தீனமாக அவை மக்கள் செறிந்த இடங்களில் விழாது பூவரசங்குளம் காட்டுப் பகுதியில் விழுந்தன காடு தீப்பற்றி எரிந்ததைக் கண்டு பயந்தோம்.

பின்பு அங்குள்ள அகதிகளுடன் சேர்ந்து காட்டுப் பாதையால் எனது வயோதிப தாயாரான முத்துலட்சுமியையும் அழைத்துக் கொண்டு நொச்சிமோட்டைக்குச் சென்றோம்.

அங்குள்ள பாடசாலையில் தங்குவதற்கு முயற்சித்த போது அப்பாடசாலை அரசாங்க அதிபருக்கும் மற்றும் மேலதிகாரிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

நாம் கால்நடையாக ஓமந்தை மகாவித்தியாலத்திற்கு சென்று இரு தினங்கள் அம்முகாமில் தங்கினோம்.

**ஹெலிவேட்டு**

அப்பகுதியால் சென்ற ஹெலிகொப்டர்கள் அடிக்கடி ஓமந்தையில் அகதிமுகாமை நோக்கி வேட்டுக்களை தீர்த்தன. பீதி அடைந்து நம் இருந்த போது அப்பகுதியிலுள்ள லொறி ஒன்று சங்குப்பிட்டிவரை செல்ல உள்ளதாக அறிந்தோம்.

அந்தலொறி உரிமையாளர் சங்குப்பிட்டிக்குச் செல்ல ரூபா 200 தருமாறு கேட்டார். அவர் கனகராயன் குளம் வரை பிரதான வீதியால் வந்து பின்பு காட்டுப் பாதை ஊடாக முருகண்டியை அடைந்தார்.

அங்கு ஒரு பொழுதைக் கழித்துவிட்டுமறுநாள் காலை பூநகரியினூடாக சங்குப்பிட்டி தாம்போதிக்கரையை அடைந்தோம்.

அங்கும் எமக்கு சோதனை மேல் சோதனை தான். பாதையை ஓட்டுவதற்கு எரிபொருள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அப்பகுதிக்கு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வழங்கிய எரிபொருள் மூலம் எம்மை பாதையில் ஏற்றினர்.

பாதை நிறைந்து காணப்பட்டது அச்சமயம் பார்த்து எங்கிருந்தோ வந்த ஹெலிகொப்டர் ஒன்றுசுமார் இரண்டாயிரம் அடி உயரத்திலிருந்து பாதையை நோக்கிச் சுட்டது. எவருக்கும் காயமேற்படவில்லை.

ஆனால் பதற்றம் காரணமாக இளம் தாய் ஒருவர் தனது இரண்டு வயது ஆண் குழந்தையை கைதவறவிட்டு விட்டார். அக்குழந்தை கடலுக்கு இரையானது. அதனைக் காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. அக்குழந்தையின் மரணமோ என் கண் முன்னேயே நிகழ்ந்தது.

**நல்லூரிலும் அதே கதை**

கரைசேர்ந்த நாம் கேரதீவிலிருந்து நல்லூருக்கு வர ரூபா ஐம்பதைக் கொடுத்தோம். நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இரவைக் கழிப்பதற்கு நின்ற சமயம் அன்றிரவு 7 30 மணிஅளவில் ஹெலிகொப்டர் ஒன்று கோயில் வீதியைச் சுற்றி வேட்டுக்களைத் தீர்த்தது.

நாம் சென்ற இடமெல்லாம் ஹெலி பறந்து வருவதைக் கண்டு வவுனியாவில் இருந்து இறந்திருக்கலாமென எண்ணினோம்.

எனது வயோதிபத் தாயாரைக் கண்ட பருத்தித்துறையைச் சேர்ந்த அன்பர் ஒருவர் எம்மை பருத்தித்துறைக்கு கூட்டிவந்தார்.

அவர் தமது வீட்டின் ஒரு பகுதியில் எம்மைத் தங்க வைத்தார். இப்பகுதி கிராம சேவகருடாக உதவி அரசாங்க அதிபரிடமிருந்து நிவாரணப் பொருள்களையும் பெற்றுத் தந்து உதவினார்.

எம்முடன் வந்த ஏனைய அகதிகளும் இவ்வாறு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்கி இருப்பதாக அறிகிறேன்.

இன்றைய நிலையில் யாழ். குடாநாட்டிலுள்ள சகல பொதுஸ்தாபனங்களும் அகதிகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்பது எனது கருத்து.

இப்படி அவர் கூறினார்.

(இ-118)

# தென்கொரியாவுடனான எல்லை திறந்து விடப்படும்

## வடகொரியா நடவடிக்கை

சோல், ஜூலை 10

தென் கொரியாவுடனான தனது எல்லைப்புறத்தை இம் மாதம்15 ஆம்திகதி முதல் வடகொரியா திறந்துவிடப்போவதாக அறிவித்துள்ளது.

தென்கொரியா அரசும் இது போன்று எல்லைப் புறக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் என்று எதிர்பார்ப்பதாக வடகொரிய அரசு அறிவித்திருக்கிறது.

இரு கொரிய நாடுகளும் விரைவில் மீண்டும் ஒரு நாடாக மாறுவதற்கு இந்த நடவடிக்கை உதவும் என்று கூறப்படுகிறது.

(இ-எ)

# விம்பிள்டன் கோப்பையை ஸ்ரீபன் எட்பேர்க் வென்றார்

லண்டன், ஜூலை 10

ஆண்களுக்கான விம்பிள்டன் டென்னிஸ் (தனி) போட்டியில் சாம்பியனாக சுவீடனைச் சேர்ந்த ஸ்ரீபன் எடபேர்க் வெற்றிபெற்றார்.

லண்டனில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் எட்பேர்க் மேற்கு ஜேர்மனி வீரரான போரிஸ் பெக்கரை 6 2, 6-2, 3-6, 3-6, 6-4 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

இரண்டாவது தடவையாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தை வென்ற ஸ்ரீபன் எட்பேர்க் 1988 இலும் இப் பட்டத்தை வென்றிருந்தார்.

(எ-மு)


## அறிவித்தல்

லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகளை 11-07-1990 புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரிக்கு சமுகம் அளிக்குமாறு மாணவமன்றத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

—செயலாளர்

(13703)

## றேடியோஸ்பதி

### வாடிக்கையாளர் கவனத்துக்கு

ஒலிப்பதிவு, திருத்த வேலைகளுக்காக எம்மிடம் பொருள்களை ஒப்படைத்த வாடிக்கையாளர்கள் கீழ்க்கண்ட முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

**றேடியோஸ்பதி**
766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

(13599)

## வைற் ஹவுஸ்

### அந்திய கால சேவை

191, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் எந்நேரமும் திறந்திருக்கும்.
இங்கு வர முடியாத பட்சத்தில் கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**(வைற் ஹவுஸ்)**
செல்வ பவனம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
இந்துக் கல்லூரி முன்பாக (13595)

## இடமாற்றம்

### அம்பிகாபதி பென்சி கூட்ஸ்

66, பெரிய கடை வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கிழ்க்காணும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**இல. 54, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

09 - 07 - 1990 திங்கட்கிழமை தொடக்கம் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.
(13653)

## இடமாற்றம்

### ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, K. K. S. வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் சூழ்நிலை காரணமாக இப்போது

**14, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியில் தற்காலிகமாக நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகி.
(சி-4850)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் டாக்டர்
**திருமதி மகேஸ்வரி அருளம்பலம்**

தோற்றம்: 04 - 10 - 1929
மறைவு 13 - 07 - 1987
திதி: 10 — 07 — 1990

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தாயார்
ஆ. வ. வீதி,
அரியாலை.

[13655]

## அறிவித்தல்

1990 ஜூலை முதலாம் திகதி நடைபெற்ற அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தர்மகர்த்தா சபையின் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் —

ஞானி என்று அழைக்கப்படும் முருகேசுகந்தசாமி அவர்களை 01 - 07 - 90 லிருந்து மீண்டும் ஆலயத்தின் வளர்ச்சி நலன்கருதி தர்மகர்த்தா சபையின் செயலாளர் பதவியை பொறுப்பேற்கும் வண்ணம் வேண்டிக் கொண்டோம் —

அதற்கமைய அவர் 01 - 07 - 90 லிருந்து செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

தர்மகர்த்தா சபை சார்பாக
தலைவர்
க. சண்முகம்
[சி-5251]

## ஐக்கிய உபவாச ஜெபதினம்

வெவ்வேறு சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி, சமாதானத்திற்காக ஜெபிப்பதற்காக!

திகதி: ஜூலை 11-ம் திகதி [புதன்கிழமை]
நேரம்: மு.ப. 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை
இடம்: யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்

வாஞ்சையோடும் எதிர்பார்ப்போடும் வருக!
[சி/5253]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். மயிலிட்டி தெற்கு உயர் வேளாண் குலதிலகர்
திருமதி
**செல்லத்துரை விக்கினேஸ்வரி**
அம்மையார்

மண்ணில்: 15-06-1931
விண்ணில்: 21-06-1989
திதி: 10-07-1990

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்:
புதல்வர், மருகர், பேரர்,
கைதடி வடக்கு,
கைதடி.
(13705)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**செல்வன் சுப்பர் இராஜேந்திரம்**
(ராஜேஸ்)

தோற்றம்:-01-07-1967 மறைவு:-10-07-1989

அன்பான எங்கள் மகனே! எம் துயர் துடைக்க யார் உண்டு என்று சென்றாயோ? புன் சிரிப்புடன் எங்களை வாழ வைத்தவனே! நீ சென்ற இடம் எது கூற மாட்டாயோ? நீ இறந்து ஒருவருடமாகியும் நீ எங்கள் முன் பேசிச் சிரிக்கிறாய். எத்தனை வருடங்கள் ஆயினும் உம்மைக் கண்டிட எம் மனம் துடிக்கிறது.

ஊறெழு ஆனந்தகானம் சர்வசக்தி சனசமூக நிலைய உப செயலாளரும், எமது கிராம வளர்ச்சியின் தந்தையும், எமது மக்களுடன் பாசமுடனும் பணிவுடனும் பழகி இதயத்தில் ஓர் இடம் பிடித்துக் கொண்ட செல்வன் சு. இராஜேந்திரம் அவர்களுக்கு எமது ஓராண்டு நினைவு அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
ஊறெழு ஆனந்தகானம் சர்வசக்தி சனசமூக நிலைய மக்கள்.

(13706)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழரைக் கொல்ல லைசென்ஸா?

தமிழ்ப் பகுதிகள் மீது அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்திருப்பது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த மூன்று வாரங்களாக தமிழ்ப் பகுதிகளுக்கு, குறிப்பாக வடபகுதி முழுவதற்கும் உணவுப் பொருள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை. எரிபொருள் ஒரு லீட்டர் தானும் வந்து சேரவில்லை. தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

நினைவலைகளை ஓடவிடும்போது மீண்டும் ஒரு 1987 ஆம் ஆண்டு முற்பகுதி திரும்பி வந்திருப்பது தெரிகிறது. 1987 ஜனவரி முதல் எரிபொருளுக்குத் தடை, தொலைத்தொடர்புத் துண்டிப்பு, மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு ஒதுக்கிய நிதியை வழங்காமல் நிதித் தடை விதித்தமை என்பன அப்போதைய பொருளாதாரத் தடைகளாக இருந்தன.

அனேகமாக அப்போதைய நிலை இப்போது மீள வந்திருக்கிறது.

சூத்திரதாரிகள் மாறி இருக்கிறார்களே அன்றி, கோட்பாடும் கொள்கையும் மாறவில்லை.

பொருளாதாரத் தடை மூலம் மட்டுமன்றி இராணுவ நடவடிக்கையாலும் நெருக்குதலைக் கொடுத்துத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிப்பது என்ற கோட்பாடு இரு சாராருக்கும் ஒன்று தான்: பொதுவானது தான்.

இராணுவ நெருக்குதல்களில் போராளிகளை மட்டுமன்றிப் பொதுமக்களையும் இலக்காகக் கொள்வது; பொதுமக்களுக்கு உயிர், உடைமைச் சேதங்களை உண்டாக்குவதன் மூலம் அவர்களது மனதில் சலிப்பையும் வெறுப்பையும் உண்டாக்குவது; ஆனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை, போராளிகள் மீதான இராணுவ நடவடிக்கையின் போது, தவறுதலாக, அல்லது தவிர்க்கமுடியாததால் நிகழ்ந்ததாக வெளியே கூறிச் சமாளித்துக் கொள்வது. இவை அந்தப் பொதுவான கோட்பாட்டின் சில அம்சங்கள்.

தமிழ்ப் பகுதிகளில் வாகனங்களை ஹெலியில் இருந்து வேட்டுத் தீர்த்து நிறுத்துவது என்ற திட்டம் முழுக்க முழுக்கப் பொதுமக்களைக் கொல்லும் இலக்குடைய ஒன்றே.

வாகனத்துக்கு முன்னால் எச்சரிக்கைக்காகத் தீர்க்கப்படும் வேட்டு. அதில் செல்லும் மக்கள் மீது விழாது என்பதற்கோ, அல்லது எச்சரிக்கை வேட்டையே வாகனத்தின் மீது தீர்த்துவிட்டு பயணிகள் சமிக்ஞையை கண்டு வாகனத்தை நிறுத்தாததால் போராளிகள் எனச் சந்தேகித்துத் தாக்குதல் நடத்தினோம் என்று படையினர் சாட்டுச் சொல்லமாட்டார்கள் என்பதற்கோ என்ன உத்தரவாதம்?

பொதுமக்கள் செல்லும் வாகனங்களை வானத்தில் இருந்து கண்காணிப்பது என்பது அவர்களின் உயிரோடு விளையாடும் செயல். இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இப்படி ஒரு திட்டத்தை சிங்களப் பகுதியில் அரச படையினர் பரிசோதித்தாவது பார்த்தது உண்டா?

அரச படையினரின் புதிய திட்டம், ஏற்கனவே அறிவித்துவிட்டோம் என்ற சேடயத்தின் பின்னால், தமிழ் மக்களைச் சுட்டுக் கொல்லும் திட்டமே அன்றி வேறல்ல. உலகின் எந்தப் பகுதியிலும், எக்காலத்திலும் கடைப்பிடிக்கப்படாத இந்த விதித்தடை - போக்குவரத்துத் தடை- உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்.

இல்லையேல் அரசாங்கம் தமிழ் மக்களையும் தனது தாக்குதல் இலக்காக வைத்திருக்கிறது என்பதற்கு இது உத்தியோக பூர்வமான உத்தரவுப்பத்திரமாகும் (லைசென்ஸாகும்) என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொள்ளட்டும்.

## அரச கட்டடங்கள் சேதம்

கொழும்பு, ஜூலை 10

மட்டக்களப்பு முதல் வாழைச்சேனை வரையிலான பல அரச கட்டடங்கள் உடைக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் இருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இக் கட்டடங்களில் இருக்கும் தளபாடங்கள் மற்றும் கட்டப்பொருள்கள் பொது மக்களால் எடுத்துச் செல்லப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது என்றும் கூறப்படுகிறது. (இ-எ)

## போக்குவரத்து ஊழியருக்கு முற்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

பிற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்கப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. சி. சுனாரத்தினம் இதனைத் தெரிவித்தார்.

பிறமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்துக்கு வந்த இத்தகைய ஊழியர்களை நேற்று திங்கட்கிழமை கோண்டாவில் டிப்போவுக்கு வருமாறு வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவரால் பணிக்கப்பட்டிருந்தனர். (இ-3-9)

## இடம் பெயர்ந்த வீடுகளில் திருட்டு

குருநகர், ஜூலை10

யாழ் - ஐந்தாம் குறுக்கு வீதியில் இருந்து இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்களின் வீடுகள் திருடர்களால் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப் படுகின்றன.

ஐந்தாம் குறுக்கு வீதி திஸவீரசிங்கி என்பவரது வீட்டில் பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் திருட்டுப் போயுள்ளன.

மேலும் சில வீடுகள் உடைக்கப்பட்டு திருட்டு நடைபெற்ற போதும் வீட்டுக்காரர்கள் இடம் பெயர்ந்து சென்றிருப்பதால் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது. (இ-51)

# மன்னார் அரச அலுவலகங்கள் அனைத்தும் செயலிழந்து விட்டன

## அரச அதிபரும் அகதியானார்

யாழ்ப்பாணம், ஜூலை10

மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல அரச அலுவலகங்களும் செயலிழந்து கிடக்கின்றன. அம்மாவட்டத்தில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மக்கள் அங்கிருந்து இடம் பெயரத் தொடங்கி இருக்கின்றனர்.

மன்னார் நகரம் கடந்த 22 ஆம் திகதியுடன் ஸ்தம்பிதம் அடைந்தது. அரச அதிபர் திரு. ஏ.சி. செபநாயகம் அகதியாகி ''சன்னி' கிராமத்தில் தங்கியுள்ளார். அவர் அங்கு தற்காலிகமாக ஓர் இடத்தில் அவரது கடமைகளைச் செய்து வருகிறார். இரவில் தேவாலயத்தில் தஞ்சமடைகிறார்.

இதேவேளை —

வங்கிகள் செயல் இழந்துள்ளதால் பணப்புழக்கமும் குறைந்து விட்டது. பணம் இல்லாததால் அதிக விலை கொடுத்தும் பொருள்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட மக்கள் தினமும் இடம் பெயர்ந்த வண்ணம் இருக்கின்றனர். [ஒ-3 9]

## வெற்றுச்சாக்கு - பரல்கள் தந்துதவக் கோரிக்கை

இன்றுள்ள நிலையில் சிற்றூரவை உறுப்பினர்கள் வீட்டுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் வெற்றுச்சாக்கு, பரல் ஆகியவற்றை தந்துதவ வேண்டும்.

இப்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி சுன்னாகம் பகுதி பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதி சிற்றூரவைக் கூட்டம் ஒன்று சமீபத்தில் நடைபெற்றது.

அச்சமயம் அதில் கலந்துகொண்டுபேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கைவிடுத்தார்.

இடம் பெயர்ந்தவர்களின் விவரங்களை தந்துதவுமாறும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறும் சிற்றூரவை உறுப்பினர்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார். (இ - 89

# வைத்தியர் - தாதிமார் இன்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரி பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கடமையாற்ற போதிய வைத்தியர்கள், தாதிகள் இல்லை. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர், தற்போது முரசுமோட்டை மிஷன் வைத்தியசாலைக் கட்டடத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்திய சாலை இயங்குகின்றது.

முன்னர் 5 டாக்டர்கள்பணியாற்றிய வைத்தியசாலையில் தற்போது டாக்டர் குணரத்தினம் மட்டுமே கடமையாற்றுகிறார்.

இதேபோல் பதினொரு தாதிமார் முன்பு கடமையாற்றினார்கள். தற்போது 3 பேரே கடமையாற்றுகின்றனர்,

முன்னர் கடமைஆற்றிய டாக்டர்களும், தாதிமார்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தற்போது கையெழுத்து வைக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய முரசு மோட்டை வைத்தியசாலையில் 5 கட்டில்கள் மட்டுமே உள்ளன. ஏனைய நோயாளர்கள் நிலத்தில் தான் படுக்கின்றார்கள்.

இதேவேளை கிளிநொச்சி வைத்திய சாலையில் இருந்து மருந்து வகைகளையோ வைத்திய உபகரணங்களையோ முரசு மோட்டைக்கு எடுத்து வர முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தற்போது உள்ள மருந்து வகைகள் முடிவடைந்ததும் வைத்தியசாலை மூடப்படும் அபாயம் தோன்றி உள்ளது. (இ-76)

## தனியார் ஆலைகளிலிருந்து அரிசி கொள்வனவுக்கு முயற்சி

ஒட்டுசுட்டான், ஜூலை 10

மாங்குளம், வவுனியா, அரசினர் களஞ்சியங்கள் ஸ்ரீலங்கா படை முகாம்களுக்கு சமீபமாக இருப்பதால் அங்கு சென்று தேவையான உணவுப் பொருள்களை எடுக்க முடியாத நிலை இருந்து வருகிறது. இதனை அடுத்து முல்லைத்தீவில் தங்கி உள்ள அகதிகளுக்கு தேவையான அரிசியை தனியார் அரிசி ஆலைகளில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கிகள் செயலிழந்துள்ளதால் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலமும், உதவி அரசாங்க அதிபர் திரு. வே. சுந்தசாமியும் தனியார் அரிசி ஆலைகளுக்குச் சென்று கடன் அடிப்படையில் அரிசியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-113)

## 5 நிமிடம் இருந்த போது பெனால்டி மூலம் கோல்
## மேற்கு ஜேர்மனி சாம்பியனானது

ரோம், ஜூலை 10

மூன்றாவது தடவையாக மேற்கு ஜேர்மனி உலக உதைபந்தாட்டச் சாம்பியனாகியது.

ரோமில் கடந்த ஞாயிறு நடந்த பதின்னான்காவது உலககிண்ண உதைபந்தாட்டச் சாம்பியனுக்கான இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணியை மேற்கு ஜேர்மனி தோற்கடித்தது தெரிந்ததே.

வழமையான நேரத்தில் ஆட்டம் முடிவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கையில், மேற்கு ஜேர்மனி அணி தனது வெற்றிக்கோலை பெனால்டி உதை மூலம் புகுத்தியது.

இடைவேளையின் பின்னர் முறைதவறி விளையாடியதற்காக ஆர்ஜென்ரீனா அணியைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1930 இல் உலககிண்ண உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி ஆரம்பமான காலத்தில் இருந்து இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட ஓர் அணியில் இருந்து, வீரர்கள் நடுவரால் வெளியேற்றப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

1974 ஆம் ஆண்டு சுவிட்ஸர்லந்தின் பேர்ன் நகரில் நடந்த 6ஆவது உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியிலும்.

1974 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியின், மியூனிச்நகரில் நடந்த 10ஆவது உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியிலும்-மேற்கு ஜேர்மனி முறையே ஹங்கேரியை 3-2 கோல்களாலும், நெதர்லந்து அணியை 2-1கோல்களாலும் தோற்கடித்து உலக கிண்ணத்தைச் சுவீகரித்திருந்தது. (இ-எ)

# அனைத்து அரசியல் கட்சி குழு முதலில் புதுடில்லி செல்லும்

புதுடில்லி, ஜூலை. 10

வடக்கு - கிழக்கு நிலை பற்றி சார்க்நாடுகளின் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்ல நியமிக்கப்பட்டுள்ள இலங்கை அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் குழு முதலில் இந்தியா செல்ல இருக்கிறது.

எதிர்வரும் சனிக்கிழமை இக்குழு சபாநாயகர் முஹம்மது தலைமையில் புதுடில்லி செல்லும். அங்கு நான்கு தினங்கள் வரை தங்கியிருந்து இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து வடக்கு-கிழக்கு நிலைமை பற்றி இக்குழுவின் உறுப்பினர்கள் விளக்கிக் கூறுவர். (இ - எ)

# எஞ்சியுள்ள தமிழ் அகதிகளை வடபகுதிக்கு அனுப்ப முயற்சி

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் ஆலயத்திலும் சரஸ்வதி மண்டபத்திலும் தங்கியிருக்கும் வடபகுதி அகதிகள் உணவு, பால்மா மற்றும் மருந்து வகைகள் வழங்கப்பட்டு, விரைவில் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இதற்கான நடவடிக்கைகளை புனர்வாழ்வு, புனரமைப்புத்துணை அமைச்சர் சமந்தா கருணாரத்தின எடுத்து வருகிறார்.

கடந்த சனிக்கிழமை மாலை கல்வித் துணை அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரனும் திருமதி. சமந்தா கருணாரத்தினாவும் அகதிகளைச் சென்று பார்வையிட்டனர்.

கோயிலிலும் சரஸ்வதி மண்டபத்திலும் இப்போது 750க்கு அதிகமான அகதிகள் இருக்கின்றனர்.

பாதுகாப்பு நிலைமை சீரானதும் புனர் வாழ்வு அமைச்சுடன் இணைந்து மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு இவர்களை அனுப்புவதாக துணை அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

### பீரங்கி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டித்துறை நகரப்பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டது தெரிந்ததே.

இதனிடையில் கடந்தசனிக்கிழமைகடற்பகுதியில்இருந்து பருத்தித்துறை பிரதேசத்தை நோக்கியும் பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [ஒ-160)

### அம்பாறை----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களக் காடையர்கள் இந்த ஆலயத்துக்கு தீ வைத்தனர். ஆனால் வேறு சிங்கள மக்கள் அதை அணைத்தனர்.

ஆனால் மறுநாள் காலை கோயிலுக்கு மீண்டும் தீ வைக்கப்பட்டது அதனால் ஆலயத்தின் முக்கிய பகுதிகள் எரிந்து நாசமாகின.

அதைத்தொடர்ந்து காடையர்கள் பஞ்சமுகப் பிள்ளையார் சிலையை தகர்த்து ஆலய குளத்தில் போட்டனர் பின்னர் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட ஆலயத் தூண்களை டிராக்டரில் சங்கிலி கட்டி இழுத்து விழுத்தினர்

அருகில் இருந்த அர்ச்சகர் மற்றும் கோயில் முகாமையாளர் ஆகியோரின் வீடுகளும் கொள்ளையிடப்பட்டன.

'கோயில் அர்ச்சகர்கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டது ஆனால் அச்செய்தியை என்னால் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை'—என்று மேலும் கூறினார் அவர். [உ-3]

### ஈழவிடயத்தில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும்.

இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல

இந்திய அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு, இலைப்படுகொலையைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் கூறினார். ]அ-எ 9]

## சடலம் அடையாளம் காணப்பட்டது

கொழும்பு, ஜூலை 10

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த சனிக்கிழமை எரிந்த நிலையில் காணப்பட்ட சடலங்களில் ஒன்று மட்டக்களப்பு மத்திய வீதியைச் சேர்ந்த குமாரசாமி கிருஷ்ணமூர்த்தி என்பவரினுடையது என்று அடையாளம் காணப்பட்டது. (உ-எ)

## முறைசாரா கல்வி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் கற்கும் மாணவருக்கான விசேட கூட்டம் நாளை புதன்கிழமை காலை 10மணிக்குப் பின்வரும் நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி' வண்ணை நாவலர் ஆகிய பாடசாலைகளில் கற்கும் மாணவர் கல்வித்திணைக்களத்துக்கு சமீபமாக இருக்கும் நல்லூர் ஸ்ரேசன் ஸ்ரீ த. க. பாடசாலையிலும்—

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை மாணவர் நெல்லியடி ம. ம. வி.லும் (பெண்கள் பிரிவு). ஏனைய பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலைகளிலும் கூட வேண்டும் என கல்வி அதிகாரி திரு ச சுப்பிரமணியம் அறிவித்துள்ளார் (ஒ)

# பொருத்தமான இடத்திலேயே அகழிகளை அமையுங்கள்; இலகுவாகக் கிடைக்கும் பொருள்களைப் பாவிக்கலாம்

(முன் தொடர்ச்சி)

மூடிய அகழிகள் ஒவ்வொரு குடும்பத்தினராலும் அமைக்கப்பட வேண்டியனவாகும். இவை செலவு குறைந்த நாளாந்தம் பாவனையிலுள்ள, இலகுவில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டே அமைக்கக் கூடியவை

இவை திறந்த அழிகளைவிட சற்று ஆழமான பாதுகாப்பான அகழிகளாகும். பொதுவாக 10 அடி நீளமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும்இவற்றினை அமைக்கலாம் இவற்றின் மேற்புறம் நாலரை அடி அகலமானதாகவும், அடிப்புறம்சற்றேகுறுகியதாக மூன்றரை அடி அகலமானதாகவும் இருப்பின் சுவர்கள் இடிவுற்று விழுவது தடுக்கப்படுகிறது.

உட்சுவர்களை மேலும் பலமானதாக்கி சரிவுற்று விழுவதை தடை செய்வதற்காக பலகைகள், கம்புகள் என்பன உட்சுவர்களுடன் இறுக்கமாக பொருத்தப்படலாம் தேவையாயின் இருக்கை வசதிகள் கூட செய்யப்படலாம்.

### குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?
### பகுதி V

### பொருத்தமான இடம்

இவ்வகையான அகழி ஒன்றினை அமைப்பதற்காக இடமானது தெரிவு செய்யப்படும் போது படையினருக்கு சந்தேகம் ஏற்படா வகையில் உங்களால் இலகுவில் செல்லக் கூடிய இடமாயும் தெரிவு செய்யப்படல் வேண்டும். உதாரணமாக கோழி, ஆடு, மாடு போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் கொட்டில்களின் கீழே அகழிகளை அமைத்து மேலே பிராணிகளை வளர்க்கலாம். வைக்கோற் போர்களின் கீழோ குப்பை மேடுகளின் கீழோ, நீர்த்தொட்டிகளின் கீழோ, விறகு அடுக்குப்பட்டிருக்கும் இடத்தின் கீழோ கூட இவற்றினை அமைக்க முடியும்

வீட்டினது வெளி மதிற் சுவரினது உட்புறம் பூ மரங்களின் இடையே அமைத்தலோ, மலசல கூடங்களின் அருகில் அமைத்தலோ கூட அரச படையினரின் பார்வையில் இருந்து தப்பக் கூடியதாய் இருக்கும் இயலுமாயின் உங்களது வீட்டுக் கிணறுகளினூடு இறங்கி ஒரு பக்கத்தைக் குடைந்து உட் செல்லக் கூடியவாறு அமைத்தல் சிரமமாய் இருப்பினும் அதுவும் சிறந்த ஒரு வழியாகும். சிலவேளைகளில் உங்களது வீட்டிற்கு மிக அருகில் ஏற்கனவே குண்டு போடப்பட்டு இடிவுற்ற நிலையிலோ அல்லது பாழடைந்த கவனிப்பாரற்ற நிலையிலோ கட்டடங்கள் யாதாயினும் காணப்படின் அவ்விடிபாடுகளை அகற்றாது அதன் உட்புகுந்து வசதியான ஓரிடத்தில் நிலத்தின் கீழ் அமைத்தலும் படையினருக்கு சந்தேகத்தை தராத ஒரு முறையாகும்.

### அமைக்கும் முறை

இனி, ஒரு மூடிய அகழியொன்றை எவ்வாறு அமைக்க வேண்டும் எனப் பார்ப்போம். இதற்கான பாவனைக்குத் தேவையான பகுதியாகிய 6 அடி ஆழமான கிடங்கு ஒன்று வெட்டப்பட்டாலே போதுமானதாகும். ஆனால் இவ்வாறு வெட்டப்பட்டிருப்பின் அதற்குத் தேவையான பாதுகாப்பான கூரையானது நிலமட்டத்தின் மேலேயே அமைக்கப்பட வேண்டியதாயிருக்கும்

இவ்வாறு அமைப்பது இலகுவில் பாதுகாப்பு படையினரின் கவனத்தை ஈர்த்து விடும் என்பதாலேயே இங்கு கூறப்படும் மூடிய அகழியமைப்புகள் அனைத்தின் கூரைகளையும் நிலத்தின் கீழேயே அமைக்குமாறு கூறப்பட்டிருக்கிறது

இருப்பினும் உங்களால் நில மட்டத்தின் மேல் கூரையமைப்பு அமைக்கப்பட்டு அதனை வைக்கோலினால் மூடி ஒரு வைக்கோற் போரைப்போலவோ, அல்லது குப்பைகளை குவித்து ஒரு குப்பைமேட்டைப்போலவோ அன்றிவேறு யாதாயினும் ஒரு

### தகவல் மேடை

முறையின் மூலம் அதனுள் அழி இருப்பதை மறைக்கக் கூடியவாறு இருப்பின் அவ்வாறும் கூட அமைக்கலாம்.

### தேவையான பொருள்கள்

அடுத்து, கூரையமைப்பினை கருத்தில் கொள்ளும் போது அதற்குத் தேவையான பொருள்களைப்பார்ப்போம். இலகுவில் கிடைக்கக் கூடிய பொருள்களான மரக் குற்றிகள், தண்டவாளங்கள் அல்லது பெரிய உறுதியான கற்கள், மண் அல்லதுமணல் சாக்குகள் போன்றவையே அவையாகும்.

ஆழமான கிடங்கு வெட்டுவது சடினமாக இருக்குமாயின் கூரையின் உயரத்தைக் குறைத்தோ அல்லது நிலத்துக்கு மேல் கூரைவரக்கூடியவாறோ அமைக்கலாம். கூரை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் கூட உங்களுக்கு எவைஇலகுவாகக் கிடைக்கின்றனவோ அவற்றினையே பயன்படுத்தலாம்.

இடம் தெரிவு செய்யப்பட்டவுடன், எமக்குத்தேவையான பிரதேசத்திலும் சற்றுக் கூடுதலான பகுதியில் இருந்து மேற்படைமண்ணை புற்கள். இலைகளுடன் சேர்த்து அப்படியே தட்டுத்தட்டாக பெயர்த்து எடுக்க வேண்டும். சிறு செடிகள், புற்கள் பசுமையாக அதில் இருக்குமாயின், அதன் மேல் நீர் தெளிக்கப்பட்டு நிழலுள்ள பிரதேசத்தில் வைக்கப்பட வேண்டும்.

பின்பு இவ்விடத்தில் ஏழரை அடி அகலத்துக்கு 1 அடி ஆழமுள்ள கிடங்கொன்று வெட்டப்பட வேண்டும். பின் அதனுள் நடுவே ஆறரை அடி அகலத்தில் ஒன்றரை அடி ஆழமாக்கப் படல் வேண்டும். பின் மீண்டும் உள்ளே ஐந்தரை அடி அகலத்தில் 2 அடி ஆழத்திற்கு வெட்டப் படவேண்டும். இதுவரை வெட்டப்பட்டிருக்கும் பகுதியே கூரை அமைப்பதற்காக பயன்படப் போகும் பகுதியாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
★ கடிதங்கள் ★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப
DHL WORLDWIDE EXPRESS
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

10 - 7 - 1990 செவ்வாய்க்கிழமை

புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான கலர் பிலிம் கழுவுவதற்கு
Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

யாழ். நகரப் பகுதியில்

# பங்கீட்டு அட்டை வழங்க ப. நோ. கூ. சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொது மக்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. மு. சிவப்பிரகாசம் இவ்வாறு தெரிவித்தார்.

உணவுப் பங்கீட்டு அட்டைகளை பெற விரும்புவோர் தங்கள் பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றைப் பெறவேண்டும்.

பின்னர் அதனைத் தமது பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளரிடம் சமர்ப்பித்து உணவுப் பங்கீட்டு அட்டையை பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு பால்மா, சீனி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-10)

# நெடுந்தீவுக் கடலிலிருந்து அடிக்கடி பீரங்கி வேட்டு

நெடுந்தீவு, ஜூலை10

நெடுந்தீவுக் கடலில் நங்கூரமிட்டிருக்கும் கடற்படைப் படகுகளில் இருந்து அடிக்கடி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன.

இதனால் கடற்கரையோரப் பகுதிகளில் குடியிருக்கும் மக்கள் தமது வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் நடுக் கடலில் இடம் பெறும் சோதனைகளை அடுத்து பொது மக்கள் மிகுந்த பீதியுடன் தமது) கடல்ப் பிரயாணத்தை தொடர வேண்டியுள்ளது. (இ-111)

நாடு பிரிவதை விரும்பாவிடினும்

# ஈழத் தமிழர் இன்னல்படுவது இந்தியாவுக்கு கவலை தருகிறது

## அமைச்சர் குஜ்ரால் கருத்து

புதுடில்லி, ஜூலை 10

இலங்கை துண்டாடப்படுவதை இந்தியா விரும்பவில்லை. ஆனால் இலங்கையில் தமிழர்கள் இன்னல் அடைவது குறித்து இந்தியாவால் கவலைப்படாமலும் இருக்க முடியவில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் புதுடில்லியில் செய்தியாளர் மந்தியில் பேசுகையில் மூன் கண்டவாறு தெரிவித்தார்.

''இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமைகளுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

''வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு பெரும் எண்ணிக்கையில் தமிழ் அகதிகள் வருவதைத் தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுடில்லியில் இலங்கை வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினாவுக்கு நான் கூறிவிட்டேன்.''

இப்படி திரு. குஜ்ரால் மேலும் சொன்னார். (இ-எ)

# மாங்குளம், கிளிநொச்சியில் ஹெலிமூலம் இறங்கமுடியும்

## விமானப்படை அதிகாரி தகவல்

மாங்குளம், கொக்காவில், கிளிநொச்சி இராணுவ முகாம்களில் விரைவில் ஆயுதப்படை ஹெலிக்கொப்டர்கள் தரையிறங்க முடியும் என்று இலங்கை விமானப் படை விங் கமாண்டர் சுனில் கப்ரால் தெரிவித்தார், என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது,

இராணுவ ஹெலிக்கொப்டர்கள், விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல்கள் காரணமாக இம் முகாம்களுக்குள் தற்போது இறங்க முடியாமல் உள்ளன.

யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து காயமடைந்த 7 ஆயுதப் படையினரை மீட்கும் ''ஒப்பரேஷன் ஈகிள்'' நடவடிக்கையை மேற்கொண்டவர் இந்த விங்கமாண்டர் சுனில் கப்ரால் என்றும் அப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது. (இ-எ)

## இன்றைய கூட்டம்

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் -வரைவுள்ளது

### கிளைக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுக்களுக்கான/ கூட்டம் 10-7-90 பிற்பகல் 3.00 மணிக்கு 18/1, கைலாசபிள்ளையார் கோவில் வீதியில் இருக்கும் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் கிளைகளின் பாதுகாப்பு, அத்தியாவசிய சேவை, உப உணவு உற்பத்தி ஆகிய விடயங்கள் சம்பந்தமாக விசேட விருந்தினர் உரையாற்றுவார்கள். அனைத்து கிளைக்குழு உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொது முகாமையாளர்.

(C/5252)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செய்திச் சாரம்

### ஒய்வூதியம் வழங்க பணம் இல்லை?

யாழ்ப்பாணம், ஜூலை 10

வவுச்சர்கள் இல்லாமலே ஒய்வூதியம் வழங்க செயலகம் தயார். ஆனால் போதியளவு நிதி இல்லாமையினால் ஒய்வூதியம் வழங்குவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

வழமையாக கொழும்பில் இருந்து வவுச்சர்கள் வந்ததும் ஒய்வூதியம் வழங்குவது வழக்கம். எனினும் இம்முறை கொழும்பிலிருந்து இதுவரை வவுச்சர்கள் வந்து சேரவில்லை.

ஆயினும் கடந்த மாதங்களில் வழங்கப்பட்ட ஒய்வூதிய அடிப்படையில் நிலுவையாக மாதத்திற்கான கொடுப்பனவை வழங்க முடியும்.

ஆனால் இந்த அடிப்படையில் ஒய்வூதியத்தை வழங்குவதற்கும் போதுமான நிதி கையிருப்பில் இல்லை எனத் தெரியவருகிறது. (ஓ-9)

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலந்துரையாடல் ஒன்று இன்று ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தில் பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த கலந்துரையாடலில் புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள மாணவர்களைக் கலந்துகொள்ளும்படி விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

### 4 ஆயிரம் பேர் இடம் பெயர்வு

பச்சிலைப்பள்ளி, ஜூலை10

பளைப் பகுதியில் இதுவரை ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம் பெயர்ந்து ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். (இ-117)

### இந்து மகளிர் இன்ட்ரக்ட் மாணவிகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். இந்து மகளிர் கல்லூரி இன்ட்ரக்ட் கழக மாணவிகளை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை கல்லூரிக்கு சமுகம் தருமாறு யாழ். றோட்டரிக் கழகம் கேட்டிருக்கிறது.

அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்திருப்போருக்காக தாங்கள் சேகரித்திருக்கும் உடு புடவைகள், குழந்தைகளுக்கான பால் உணவு ஆகியவற்றுடன் அன்றைய தினம் கல்லூரி அதிபரையும், இன்ட்ரக்ட் கழக பொறுப்பாசிரியர் திருமதி நவரத்தினராஜாவையும் சந்திக்கும்படி இன்ட்ரக்ட் மாணவிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

### மேலும் 4 பேர் கைது

சென்னை, ஜூலை 10

சென்னை கோடம்பாக்கத்தில் ஈ. பி. ஆர். எல். எப். தலைவர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நேற்று பொலீஸார் மேலும் 4 பேரைக் கைது செய்தனர்.

இச்சந்தேக நபர்கள் உள்ளூர் வாசிகள் என்றும் எந்தப் போராளிக் குழுவையும் சேர்ந்தவர்கள் அல்லர் என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

### கூட்டணி யுத்த நிறுத்த கோரிக்கை

கொழும்பு, ஜூலை10

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ.நா. படை அல்லது காமன்வெல்த் நாடுகள் சமாதான படை ஆகியவற்றை அழைக்க வேண்டும் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஈ)

# மனைவி, மாமியின் சடலங்களை மீட்க ஒருவர் படும்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படும் தனது மனைவியினதும், மாமியினதும் சடலங்களைப் பெற வழியில்லாமல் ஒருவர் கஷ்டப்படுகிறார்.

திரு. சரவணப்பெருமாள் என்பவர் காரைநகரைச் சேர்ந்தவர். காரைநகர் கடற்படை முகாமில் இருந்து அடிக்கடி நடக்கும் பீரங்கித் தாக்குதலைத் தொடர்ந்து அவரது குடும்பம் இடம்பெயர்ந்தது.

இடையில், இம்மாதம் இரண்டாம் திகதி திரு. சரவணப்பெருமாளின் மனைவியும், மாமியாரும் தங்கள் வீட்டைப் பார்ப்பதற்காகச் சென்றனர்.

அவர்கள் இருவரையும் கடற்படையினர் கைதுசெய்ததாகவும், பின்னர் சுட்டுக் கொன்றுவிட்டதாகவும், சடலங்கள் கடற்படை முகாமுக்குச் சமீபமாகக் கிடப்பதாகவும் அவருக்குத் தகவல் கிடைத்ததாம்.

ஆனால் சடலங்களை எடுத்து வந்து இறுதிக் கிரியைகளைச் செய்யமுடியாது அவர் கவலையில் மூழ்கியுள்ளார்.

சடலங்களை மீட்டுத் தருமாறு, அவர், நேற்று செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடமும் விண்ணப்பித்தார். ஆனால் அவர்கள் இந்த விடயத்தில் தங்களால் உதவ முடியாது என்று தெரிவித்துவிட்டனர். (அ-3)

உதவி அரச அதிபர், கிராமசேவையாளரை

# அகதி முகாம்களுக்குச் சென்று பார்வையிடுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்கு கிராம சேவையாளர்கள் தினமும் சென்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். உதவி அரசாங்க அதிபர்களும் முகாம்களுக்குச் சென்று மேற்பார்வை செய்ய வேண்டும்.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

அகதி முகாம்களில் நிலவும் குறைபாடுகளை அதிகாரிகள் எவரும் கவனிப்பதில்லை என்று [illegible] புகாரை அடுத்தே அரச அதிபர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். (ஓ-3)

பிரேமாவின் பேச்சுக் குறித்து

# கருத்து வெளியிடுவதற்கு இந்தியத் தரப்பு மறுப்பு

புதுடில்லி, ஜூலை 10

சர்வதேச சமூகத்தின் முன்னிலையில்தான் விடுதலைப் புலிகளுடன் இனிப் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று முன்தினம் அறிவித்திருந்தார் அல்லவா!

திரு. பிரேமதாஸாவின் இந்த நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்க இந்திய அரசு நேற்று மறுத்துவிட்டது.

செய்தியாளர்கள் இதுபற்றி கேட்டதற்கு புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் கருத்துக்கூற மறுத்துவிட்டனர்.

எனினும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அண்மைக் காலமாக எழுந்துள்ள நிலைமை குறித்து இலங்கை அரசுடன் புதுடில்லி அரசு தொடர்புகொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-எ]

### சர்வதேச...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கத்தின் தலையீடு அமையலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

சார்க் அமைப்பு, பொது நல அமைப்பு நாடுகள், அணிசேரா நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதித்துவக் குழுக்களின் நல்லாதரவுடன் இப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படலாம்.

ஆயுதங்களை ஒப்படைத்தல் என்ற முன் நிபந்தனை உண்டு - என்றார்

### யாழ்ப்பாணத்தில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திற்கான உணவு இருக்கிறது. உணவுப் பற்றாக்குறை அங்கு இல்லை.

உணவுப் பற்றாக்குறை இருக்கும் என்றால் அது விடுதலைப் புலிகள் உணவு விநியோகத் தடையை ஏற்படுத்தியதால் தான் உருவாகியிருக்கும்.

உணவு விநியோகம் பற்றாக்குறையை நீக்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற வாகனங்கள் இப்போது வவுனியாவில் தரித்து நிற்கின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுமதி கிடைத்ததும் அவை வடக்கு நோக்கி செல்லும்-- என்றார். (அ-எ)

### கோட்டை----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக கீழ் நோக்கி இறங்கிய வேளைகளில் அவற்றை நோக்கி போராளிகள் வேட்டுகளை தீர்த்தனர்.

இதே வேளை விமானங்கள் பொதிகளைப் போட்ட சமயம் ஹெலி ஒன்று சுற்றிய படி வேட்டுகளைத் தீர்த்தது. (ஓ)

### பத்து நாட்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரோ, விடுதலைப் புலிகளோ தங்களை இடைமறித்துத் தடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தொடர்ந்தும் ஆயிரக்கணக்கில் அகதிகள் ராமேஸ்வரம் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர் என்றும், இவர்கள் பல்வேறு முகாம்களுக்கும் பஸ்கள், லொறிகள், வான்கள் மூலம் அனுப்பப்பட்டுவருவதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (அ-எ-9)

### கிழக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொன்று குவிப்பதாகவும்-

இதன் மூலம் அப்பகுதி மக்களுக்கு ''பாடம் புகட்ட!'' அவர்கள் முயல்வதாகவும்- ஏஜென்ஸி செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தக் குழுக்களில் ஜிகாத் அமைப்பைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் பலரும் இடம் பெற்றிருப்பதாகவும் கூறப்பட்டது. [உ]

### செஞ்சிலுவை அடையாளம்

கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் செஞ்சிலுவை அடையாளம் போடப்பட்டிருக்கிறது சமீபத்தில் யாழ் நகரில் நடைபெற்ற ஹெலி தாக்குதலின் போது முதியோர் இல்லமும் சேதம் அடைந்தது தெரிந்ததே, [இ - 51]

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் - சண்முகம்

அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சண்முகம் அவர்கள் 6.7.90 வெள்ளிக்கிழமை காலமானார். இவர்காலஞ்சென்ற சுப்பிரமணியம் மீனாட்சி தம்பதியினரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் ஆவார். அமரர் வேலுப்பிள்ளை, அமரர் பொன்னம்பலம், நாகமுத்து (திருவையாறு) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அமரர் பூபாலபிள்ளை ஆறுமுகம் (கொக்குவில்), செல்லம்மா (கனடா), தங்கம்மா (கனடா), அமரர் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவர் யோகேஸ்வரி (அனலைதீவு), தருமலிங்கம் (அனலைதீவு), பத்மநாதன் (கனடா), புவனேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தந்தையும் அமரர் வேலுப்பிள்ளை (முருகையா), பரமலிங்கம், (கொழும்பு றேடிங் கொம்பனி உரிமையாளர் யாழ்.) ஞானாம்பாள், லலிதாம்பாள் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயராணி (கனடா), நடேசன் (கனடா), தவயோகராஜா (கனடா), சிவயோகராஜா (கனடா), யோகராணி (கனடா), ஜீவராணி, வளர்மதி, கோடீஸ்வரன், கேதீஸ்வரன், சாந்தீஸ்வரன், குகதீசன், ஜெயமதி, தனபாலன் சயந்தன், கவிதா, சதீசன், அஜந்தினி, பார்த்திபன் ஆகியோரின் அருமைப் பேரனும் நிந்துஜா [கனடா] வின் அன்புப் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7.7.90 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் [அனலைதீவில்] நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. பரமலிங்கம்

[13704]

## சந்தியாப்பிள்ளை பறுநாந்துப்பிள்ளை

எழுவைதீவைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை பறுநாந்துப்பிள்ளை 08- 07- 1990 இல் காலமானார்.

அன்னார் மதலேனத்தின் அன்புக் கணவரும், தேவராசா (பிரதம எழுத்துவினைஞர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பளை), செபமாலைமுத்து ஆகியோரின் அன்புத் தந்தையும், பேதுருப்பிள்ளை (உபதபால் அதிபர், எழுவைதீவு), றமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிறேசியன், மேரிறுவ்வீனா, மேரியூக்கலிஸ்ரா, மேரிஅன்ரனிரா, பவானி, அமலி, அமலன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 09- 07- 90 திங்கள் மாலை 4 மணியளவில் புனித தோமையார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
—குடும்பத்தினர்

எழுவைதீவு (13597)

## செல்லையா சிவஞானசம்பந்தன்

(சம்பந்த மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற அதிபர், சோதிடர்)

சரவணை மேற்கு செல்லையா சிவஞானசம்பந்தன் அவர்கள் 4 - 7 - 1990 இல் காலமாகிவிட்டார். இவர் யா/செட்டிபுலம் அ. த. க.பாடசாலை வேலணை முன்நாள் அதிபரும், சரவணையூர் சோதிடரும், காலம் சென்ற செல்லையா, சொர்ணம்மாவின் அன்புப் புதல்வரும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், காலம் சென்ற [சிவானந்தன் (முன்னாள்) சிங்கப்பூர் கை சொப் சிப்பிங்லையின்) குகானந்தன் (West Germany), தயாநிதி கலாநிதி (Italy) கருணாநிதி, அருணாநிதி, உஷாநிதி, (வசந்தி) சொர்ணாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (Buisness Colombo)), செல்வன் பத்மநஞ்சன், செல்விகள் தனுஷியா, அனுஷியா, ஆகியோரின் மாமனாரும், காலம் சென்றவர்களான திருஞானசம்பந்தன் (Lake House Colombo 1), ஏகநாயகம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற கந்தையா, சிவபாக்கியத்தின் மருமகனும், சோதிப்பிரியா, கிருத்திகன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (5 - 7 - 1990) வியாழக்கிழமை சரவணை மயானத்தில் 4 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.சித்தானந்தன்

'சிவாமகால்'
சரவணை,
வேலணை. (13656)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org